**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No. 30/2024 - PW-10**

| | |
|---|---|
| Name | திரு.டாக்டர். நாகேந்திர குமார் |
| Husband/Father Name | அர்ஜுனன் |
| Village /Area | பார்க் டவுன் |
| Taluk | சென்னை |
| Occupation | இணை பேராசிரியர் |
| Age | 40 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 18.09.2025.

**(2ம் எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ உயர்நிலை துறையில் இணை பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.07.2019 அன்று நான் அரசு வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசியராக பணியில் இருந்த போது கொண்டபாளையம் காவல் நிலையம் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள் கடிதத்தின்படி கொண்டபாளையம் காவல் நிலைய குற்ற எண்.285/2019 வழக்கில் இறந்து போன திரு.சுப்ரமணி வயது 23 ஆண் என்பவரது பிரேதத்தை காவலர் எண்.1988 திரு.கோட்டீஸ்வரன் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு அதே நாளில் பிற்பகல் 3.15 மணியளவில் பிரேத கூராய்வு செய்தேன். கூராய்வின் போது மரண விரைப்பு இரு கால்களில் மட்டும் காணப்பட்டன. அவரது கை விரல் நகங்கள் வெளிறி இருந்தன. அவரது

உடலில் காணப்பட்ட இறப்பிற்கு முன்பு உண்டான காயங்கள் பின் வருமாறு:–

**<u>காயம் 1</u> – செம்பழுப்பு நிற சிராய்ப்பு காயங்கள்**:– a)3.5 x 2.8 cm அளவில் நெற்றியின் மத்தியில் தலைமுடி கோட்டின் மீது காணப்பட்டது. b)2.8 x 2.2 cm அளவில் நெற்றியின் இடது புறம் காணப்பட்டது. c)2.5 x 1.5 cm அளவில் தலையின் இடது புறம் காணப்பட்டது. d)11.8 x 4.2 cm அளவில் இடது தோல் பட்டையில் காணப்பட்டது. e)பல நீண்ட கீரல் காயங்களில் சில மேலிருந்து கீழாகவும் மற்றும் சில மேலிருந்து கீழாக இடது புறம் நோக்கி தேய்ந்தவாறு முதுகு முழுவதும் காணப்பட்டது. f)4 நீண்ட கீரல் காயங்கள் 4.5 – 9.5 cm x 0.2 cm அளவில் வலது புஜத்தின் முன் பகுதியில் காணப்பட்டன. அவை மேலிருந்து கீழாக வலது புறம் நோக்கி காணப்பட்டன. g)3.8 x 0.2 cm அளவிலான நீண்ட கீரல் காயம் வலது கையின் பின்புறத்தில் காணப்பட்டது. h)3 வளைந்த நகக்கீரல்கள் 4.5 x 3.2 cm பரப்பளவில் இடுப்பின் இடது வெளிப்பகுதியில் காணப்பட்டது. I)5.5 x 0.3 cm அளவிளான வளைந்த ஒற்றை நகக்கீரல் இடது தொடையின் உள் பகுதியில் காணப்பட்டது.

**<u>காயம் 2</u>** – கருஞ்சிவப்பு நிற பரவிய கன்றிய காயம் கீழ் உதட்டின் இடது பாதியில் காணப்பட்டது.

**<u>காயம் 3</u> – சீரற்ற கிழிந்த காயங்கள்** :– a)2.5 x 1.5 cm x எலும்பு ஆழத்துடன் உச்சந்தலையின் முன் பகுதியில் காணப்பட்டது. b)4.3 x 3.2 cm x எலும்பு ஆழத்துடன் நெற்றியின் இடது புறம் காணப்பட்டது. c)3.2 x 1.2 cm x எலும்பு ஆழத்துடன் தலையின் இடது புறம் காணப்பட்டது. தலையை தொடர்ந்து கூராய்வு செய்ததில் கருஞ்சிவப்பு நிற பரவிய இரத்த கட்டு தலைத்தோலின் முன் மற்றும் இரு

பக்கங்களுக்கு அடியில் காணப்பட்டது. அதனடியில் இருந்த கபாலத்தின் முன் பகுதி சீரற்ற நொறுங்கிய முறிவுடன் காணப்பட்டது. கபாலத்தை பிளந்து பார்த்த போது 2.3 cm தடிமன் உள்ள கருஞ்சிவப்பு நிற Subdural இரத்த கட்டு பெருமூளையின் இருப்பக்கங்களிலும் முன் பகுதியின் மீது காணப்பட்டது. பெருமூளையின் இருபக்கங்களின் முன் மற்றும் பின் பகுதிகள் கன்றி காணப்பட்டன. மெல்லிய பரவிய Subarachnoid இரத்த கசிவு மூளையின் மேற்பரப்பு முழுவதும் காணப்பட்டது. மூளை வீங்கியும் வெளிறியும் காணப்பட்டது. கபாலத்தின் இடது அடிப்பகுதியில் 5.8 cm நீளமுள்ள விரிசல் முறிவு காணப்பட்டது. இடது கண்ணை சுற்றி கன்றி காணப்பட்டது.

**<u>காயம் 4:-</u> கிடைமட்டமாக சாய்ந்த வெட்டு காயங்கள்:-** a)4.5 x 1.2 cm x எலும்பு ஆழத்துடன் தலையின் இடது பகுதியில் இடது காது மடலுக்கு மேல் காணப்பட்டது. அதை தொடர்ந்து கூராய்வு செய்ததில் அதனடியில் இருந்த கபாலத்தின் மேலோட்டமான வெட்டு காணப்பட்டது. b)3.8 x 0.8 cm x எலும்பு ஆழத்துடன் தலையின் இடது பகுதியில் இடது காது மடலுக்கு பின்புறம் காணப்பட்டது. c)3.5 x 0.8 cm x எலும்பு ஆழத்துடன் தலையின் இடது பகுதியில் இடது காது மடலுக்கு கீழ் பின் பகுதியில் காணப்பட்டது. மேலும் அது இடது காதின் கீழ் பகுதியையும் வெட்டி காணப்பட்டது. அதனடியிலருந்த எலும்புகள் இயல்பாக இருந்தன. d)11.8 x 3.5 cm x கழுத்து எலும்பு ஆழத்துடனான வெட்டு காயம் கழுத்தின் முன் பகுதியில் காணப்பட்டது. அதனடியிலிருந்த ரிப்பன் தசைகள், நரம்புகள், குரல் வளை, மூச்சு குழாய், தைராய்டு சுரப்பி மற்றும் கழுத்தின் பெரிய இரத்த நாளங்கள் ஆகியன வெட்டப்பட்டு காணப்பட்டன. e)8.5 x 2.5 x 3.1 cm அளவில் இடது தோல்பட்டையின் பின்புறம் காணப்பட்டது. f)5.8 x 1.5 x 2.5 cm

அளவில் இடது முழங்கையில் காணப்பட்டது. அதனடியிலிருந்த எலும்புகள் இயல்பாக இருந்தன. g)1.8 x 0.8 x 0.8 cm அளவில் இடது மோதிர விரலில் காணப்பட்டது. அதனடியிலிருந்த எலும்பு இயல்பாக இருந்தது. மேற்கூறிய 4ம் எண் காயங்களின் ஓரங்கள் அனைத்தும் சீராக வெட்டப்பட்டும் கன்றியும் காணப்பட்டது.

இடது 2வது விலா எலும்பு சீரற்ற முறையில் முறிந்தும் அதனை சுற்றியிருந்த மென் திசுக்கள் கன்றியும் காணப்பட்டது. இருதயம் இயல்பான அளவிலும் அதன் அனைத்து அறைகளிலும் சொர்ப்பமான இரத்ததுடன் காணப்பட்டது. அதன் வால்வுகள் மற்றும் இரத்த நாளங்கள் இயல்பாக இருந்தன. நுரையீரல்கள் இயல்பான அளவிலும் வெளிறியும் காணப்பட்டன. குரல் வளை மற்றும் மூச்சு குழாய் காலியாகவும் அவற்றின் சளி படலம் இரத்தம் தோய்ந்தும் காணப்பட்டன. நாவடி எலும்பு இயல்பாக இருந்தது. இரைப்பையில் சுமார் 20 மில்லி மஞ்சள் நிற கூழ் போன்ற திரவம் எவ்வித குறிப்பிடதக்க வாடையின்றி காணப்பட்டது. அதன் சளி படலம் வெளிறி இருந்தது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும் வெளிறியும் காணப்பட்டன. குடல்களில் மலப் பொருட்கள் காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு மற்றும் முதுகு எலும்புகள் இயல்பாக இருந்தன. இந்த பிரேத பரிசோதனையானது பிற்பகல் 4.15 மணியளவில் நிறைவுற்றது. இறந்த நபரின் உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து ரசாயன பரிசோதனைக்காக அனுப்பபட்டு அவற்றில் நச்சு பொருட்கள் எதுவும் கண்டறியப்படவில்லை என அறிக்கை பெறப்பட்டது. இதனால் மேற்படி இறந்த நபர் தொண்டை அறுக்கப்பட்டதனால் உண்டான அதிகப்படியான இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியினால்

இறந்திருக்கக்கூடும் என்றும் மேலும் அவரது உடலில் பல தரப்பட்ட காயங்கள் காணப்பட்டன என்றும் இறுதி கருத்து தெரிவித்து சான்று வழங்கினேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய இறுதி கருத்துரை **அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேதமானவர் பிரேத பரிசோதனைக்கு முன்பாக சுமார் 24 மணி நேரத்திலிருந்து 36 மணி நேரத்திற்குள் இறந்திருக்கக்கூடும்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:– இல்லை

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.09.18 17:59:43 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.